DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 275/2023

Prosecution witness – PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. வினோத்கண்ணன் | Caste: | |
| Father's Name | : முருகன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

20.06.2025 – 02.55 PM

3, 4 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளுக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிரி இறந்துவிட்டார். 2ம் எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டுவிட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் டி.புனவாசல் கிராமத்தில் குடியிருந்து காவலர் போட்டித்தேர்விற்கு படித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். எனக்கு வழக்கு சம்மந்தமாக தெரியும். கடந்த 05.06.2023ம் தேதி இரவு 08.00 மணியளவில் A.தரைக்குடி கிராமத்திற்கு எனது நண்பரான ஜெயமுருகன் என்பவரை சந்திப்பதற்காக வந்தபோது கருப்பசாமி என்பவரது வீட்டின் அருகில் அபிராமம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரித்துக் கொண்டிருந்தார்.

2. அந்த இடத்தில் கருப்பசாமி என்பவரை முத்துக்குமார் தாக்கியது சம்மந்தமாக போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தை படம் வரைந்து எழுதினார்கள். அந்த இடத்தில் கிடந்த கருவேல மரக்கட்டை ஒன்றை கைப்பற்றினார்கள். அதற்கு சாட்சியாக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பமும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பமும் என்னுடையது. என்னுடன் ஜெயமுருகன் என்பவரும் இருந்தார். அவரும் சாட்சி கையொப்பம் செய்தார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.**

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.